தமிழர்களின் நலனுக்கு எதிரானவர்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!... 3-ஆம் பக்கத் தொடர்ச்சி

வீடியோக்கள் இணையத்தில் வெளியாகி, ஆர்.என். ரவி தனது பேட்டியில் கூறிய கருத்துகள் பொய்யானவை என்பது தெரியவந்தது.

தீட்சிதர்களின் மகள்களான 6 மற்றும் 7ஆம் வகுப்பு மாணவிகளை வலுக்கட்டாயமாக மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச்சென்று அரசு மருத்துவர்கள், தடை செய்யப்பட்ட இருவிரல் பரிசோதனைக்கு உட்படுத்தியதாகவும், இதன் காரணமாக சில பெண் குழந்தைகள் தற்கொலைக்கு முயன்றதாகவும் ஆளுநர் ஆர். என்.ரவி தனது பேட்டியில் குற்றம் சாட்டியிருந்தார் என்றும், ஆளுநரின் இந்தக் கருத்துக்கள் தவறானவை என்று பின்னர் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்றகருத்துக்களைகுற்றவியல்விசாரணைக்குகிடையூறாகவும், சாட்சியங்களைச் சிதைக்கும் வகையிலும் ஒரு சாதாரண நபர் வெளியிட்டிருந்தால், அந்த நபர் மீது உரிய சட்டப்பிரிவுகளின் கீழ், காவல்துறையினர் நிச்சயம் வழக்குப்பதிவு செய்திருப்பார்கள்;குழந்தைத்திருமணம்என்றகொடியகுற்றத்தில் இருந்து காப்பாற்றும் வகையில், கருத்துத் தெரிவிப்பதை நல்ல மனசாட்சி உள்ள யாராலும் அனுமதிக்க முடியாது" என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கடுமையான அரசியலமைப்பு மீறல்!

15.6.2023அன்று,தனதுஅமைச்சரவைசகாக்களில் ஒருவரானவி.செந்தில்பாலாஜிக்குஉடல்நலக்குறைவு ஏற்பட்டு, அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதால், அவர் வகித்து வந்த மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைகளை தனது அமைச்சரவையில் உள்ளவேறுஇரண்டுஅமைச்சர்களுக்குஒதுக்கீடு செய்ய விரும்பியதாகவும், செந்தில்பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக தக்க வைக்க விரும்பி, இலாகா மாற்றம் தொடர்பான கடிதத்தை 15.6.2023 அன்று ஆளுநருக்கு அனுப்பியதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

16.6.2023 அன்று ஆளுநர், இலாகா மாற்றத்தை ஏற்றுக்கொண்டு தனக்குக் கடிதம் எழுதியதாகவும், அதில்செந்தில்பாலாஜிகுற்றவியல்நடவடிக்கைகளை எதிர்கொள்கிறார்என்பதால்,இலாகாஇல்லாதஅமைச்சராகஅவர்தொடர்வார்என்றதனதுபரிந்துரையைஏற்க முடியாதுஎன்றுஆளுநர்தெரிவித்திருந்ததாகவும்குறிப்பிட்டுள்ள முதலமைச்சர்,

ஆளுநர் அவர்களிடமிருந்து மேற்கண்ட கடிதம் கிடைத்ததும், செந்தில்பாலாஜி அமைச்சரவையில் நீடிப்பதுதொடர்பானஎனதுபரிந்துரையைவலியுறுத்தி அன்றேபதில்அனுப்பப்பட்டது.அமைச்சர்கள்நியமன விவகாரத்தில் 164(1) பிரிவுக்கு முரணாகவும், எனது ஆலோசனைக்குமுரணாகவும்தமிழ்நாடுஆளுநர்ஆர். என்.ரவி செயல்படுகிறார் என்பதையே இச்செயல்கள் காட்டுகின்றன" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒருபுறமிருக்க, முன்னதாக 31.5.2023 அன்று வி.செந்தில்பாலாஜி மீதான "கிரிமினல் நடவடிக்கைகள்"அவருக்குச்சாதகமாகமுடிவடையும்வரை,அவரை அமைச்சரவையில் இருந்து உடனடியாக நீக்குமாறு ஆளுநர்கடிதம்அனுப்பியநிலையில்,அதற்குஉடனே 1.6.2023தேதியிட்டஒருகடிதத்தைதான்எழுதியதைக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், அக்கடிதத்தில் சட்டப்படி, ஒரு அமைச்சர் கைது செய்யப்படுகிறார் அல்லது ஒருவிசாரணைஅமைப்பால்விசாரிக்கப்படுகிறார்என்பதற்காகஅவர்பதவிவகிக்கத்தகுதியற்றவர்ஆகமாட்டார் என்பதை விரிவாக விளக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில்,(1)விசாரணையைஎதிர்கொள்ளும் நபர், (2) குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட நபர் மற்றும் (3) நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தண்டிக்கப்பட்ட நபர் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைத்தான்குறிப்பிட்டதாகவும், லில்லிதாமஸ் (எதிர்) இந்திய ஒன்றியம் (2013) பிரிவு 7, உட்பிரிவு 653 என்ற வழக்கில், மாண்பமை உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி,நீதிமன்றத்தால்தண்டிக்கப்பட்டால்மட்டுமே ஒருவர் அமைச்சர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதிநீக்கம் செய்யப்படுவார் என்று சுட்டிக்காட்டியதாகவும், ஒரு அமைச்சரை நியமிப்பது அல்லது நீக்குவது முதலமைச்சரின்தனிப்பட்ட விருப்பம் என்றும், ஆளுநரின் இத்தகைய பரிந்துரை சட்டவிரோதமானது என்றும்,தான்ஆளுநருக்குக்கடிதம்மூலம் தெரிவித்ததாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், அனைவரையும் அதிர்ச்சியிலும்,ஆச்சரியத்திலும்ஆழ்த்தும்வகையில்,29.6.2023 அன்றுஇரவு7:45மணியளவில்ஆளுநர்ஒருகடிதத்தை தனக்கு அனுப்பியதாகவும், அதில் அதில் இந்திய அரசியலமைப்பின்154,163மற்றும்164ஆவதுபிரிவுகளை மேற்கோள்காட்டி, அமைச்சர் வி.செந்தில்பாலாஜியை உடனடியாகஅமைச்சரவையில்இருந்துஆளுநர்நீக்கியதாகவும் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், ஆளுநரின் அந்தக் கடிதத்துக்குப் பதில் அளிப்பது தொடர்பாகதான்ஆலோசனைநடத்திக்கொண்டிருந்தபோது,திடீரெனஅன்றிரவு11.45மணிக்கு,29.6.2023 தேதியிட்ட ஆளுநரின் கடிதத்தை "நிறுத்திவைக்கும்" மற்றொரு கடிதம் ஆளுநரிடமிருந்து தனக்குக் கிடைத்ததாகவும், அந்த இரண்டாவது கடிதத்தில், இந்தியத் தலைமை வழக்கறிஞரின் கருத்தைப் பெறுமாறு உள்துறை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக ஆளுநர் தெரிவித்ததாகவும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"இப்பிரச்சினை தொடர்பாக நாடு முழுவதும் பரவலாக விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது, அனைத்து முன்னணி நாளிதழ்களும்தங்கள்தலையங்கங்களில்ஆளுநர்ஆர்.என்.ரவியின்முறையற்றசெயல்பாட்டைக்கண்டித்துக்கடுமையாகவிமர்சித்திருந்தன" என்பதைச்சுட்டிக்காட்டியுள்ளமுதலமைச்சர், "ஆளுநர் ஆர்.என். ரவி, தனது இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் ஆளுநர் பதவியை சிறுமைப்படுத்தியுள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பிற்கு முரணான ஆளுநரின் கடிதங்கள்!

ஆளுநரின் 29.6.2023 தேதியிட்ட இந்த இரண்டு கடிதங்களுக்கும், தான் 30.6.2023 அன்று அனுப்பிய கடிதத்தில், சட்டப்பிரிவு 164 (1)இன் கீழ், முதல மைச்சரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே ஆளுநர் அமைச்சர்களைநியமிப்பார்மற்றும்நீக்குகிறார்என்றும், அந்த வகையில் அமைச்சரவையில் யார் இடம்பெற வேண்டும்அல்லதுயார்இடம்பெறக்கூடாதுஎன்பதை முடிவு செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை என்பதையும்மீண்டும்தான்வலியுறுத்தியதாகமுதலமைச்சர் குறிப்பிட்டுள்ளதோடு, 29.6.2023 தேதியிட்ட ஆளுநரின் கடிதங்கள், அரசியலமைப்பிற்கு முரணானவை, செல்லாதவை மற்றும் சட்டத்திற்குப் புறம்பானவை என்பதால்,தான்அவற்றைப்புறக்கணித்ததாகவும்அவர் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் என்பவர் அரசியல் விருப்பு வெறுப்புகள், கட்சிஅரசியல்அல்லதுஎதிர்காலநியமனங்கள்குறித்த எதிர்பார்ப்புகள் அற்றவராக இருக்க வேண்டும் என்ற தனது கருத்தை குடியரசுத்தலைவர் ஏற்றுக்கொள்வார் எனதான்நம்புவதாகவும், ஆளுநர்அலுவலகம்என்பது அரசியல்சார்பற்றதாகவும், ஆளுநர்தனது செயல்பாட்டிலும், பார்வையிலும், உண்மையாகவும் மதச்சார்பற்றவராகவும்இருக்கவேண்டும்என்றும்,ஒருநல்லஆளுநர் தன்னைப் பற்றிய ஒரு உயர்வான கருத்தை அரசாங்கத்திற்குள்ளும், மாநில மக்கள் மத்தியிலும் உருவாக்க உதவ வேண்டும் என்றும், அவர் மாநில மக்கள் மீதும், திறமையான நிர்வாகத்தின் மீதும் அக்கறை கொண்டவராக இருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், ஏதோ ஒரு கட்சி அல்லது கருத்தியலின் நலனை வளர்ப்பதற்காக ஆளுநர் செயல்படக்கூடாது என்றும், அவர் மாநிலத்தின் நலனுக்காகத்தனதுஅரசியலமைப்புக்கடமைகளைநிறைவேற்றுவதில் கவனம் செலுத்தி, அரசியலமைப்புக் குறிக்கோள்கள் மற்றும் நெறிமுறைகளுக்கு ஏற்பச் செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கூட்டாட்சித் தத்துவத்தைச் சிதைக்கிறார், தமிழ்நாட்டு ஆளுநர்!

ஒன்றிய ஆளும் கட்சியை எதிர்க்கும் ஒரு கட்சியின் கைகளில் மாநில ஆட்சி இருக்கும்போது, மாநிலத் தலைநகர்களில் அமர்ந்துகொண்டு, அந்த மாநில அரசை கவிழ்க்கும் வாய்ப்பைத் தேடும் ஆளுநரை வெறும் ஒன்றியத்தின் முகவராகத்தான் கருதமுடியும் என்றும்; ஆளுநரின் இத்தகைய செயல் நமது கூட்டாட்சித் தத்துவத்தைச் சிதைத்து, சிதிவுபடுத்தி, இந்திய ஜனநாயகத்தின் அடிப்படைத்தத்துவங்களையேஅழித்துவிடும்"என்றுசுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்அவர்கள், "தமிழ்நாடுஆளுநர்ஆர். என். ரவி அவர்களே இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு!" என்றும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"அரசியல்சாசனத்தையும்,சட்டத்தையும்பாதுகாப்பதற்கும், தமிழ்நாட்டு மக்களின் சேவைக்கும், நல்வாழ்விற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்கும், 159 ஆவது பிரிவின்கீழ் எடுத்த உறுதிமொழியை ஆளுநர் ஆர்.என்.ரவி மீறியுள்ளார்என்பதுதெளிவாகிறது;அவர் வகுப்புவாதவெறுப்பைத்தூண்டிவிட்டு,மாநிலத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கிறார்" என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல்,அ.தி.மு.க.முன்னாள்அமைச்சர்கள் மீது வழக்குத் தொடர சி.பி.ஐ. வேண்டுகோள் விடுத்தும், அதற்கு அனுமதி தராமல் காலம் தாழ்த்திவரும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி , மறுபுறம் தனது அமைச்சர் ஒருவர் மீது வழக்கு விசாரணை தற்போது தான் தொடங்கியுள்ள நிலையில், அவரை "டிஸ்மிஸ்" செய்ய அவசர கதியில் செயல்படுவதன் மூலம் தனது அரசியல் சார்புகளை வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள்,

"ஆர்.என்.ரவி, தனது நடத்தை மற்றும் செயல்பாடுகள் மூலம், தான்ஒருதலைப்பட்சமானவர்மற்றும்ஆளுநர்பதவியைவகிக்கத் தகுதியற்றவர் என்பதை நிரூபித்துள்ளார்; அவர் உயர் பதவியில் இருந்துநீக்கப்படுவதற்குதகுதியானவர்!"என்றுஅழுத்தந்திருத்தமாக தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 156(1)இல், குடியரசுத்தலைவர்விரும்பும்காலம்வரைஆளுநர்பதவியில் இருப்பார்என்றுஇருப்பதாகவும்,தமிழ்நாட்டுமக்களின் நலன் கருதியும், தமிழ்நாடு அரசின் நலன் கருதியும் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து உண்மைகளையும் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் கனிவான பார்வைக்கு வைக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

"நமது இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய முன்னோர்களின்உணர்வையும்,மாண்புகளையும்பாதுகாக்கும் வகையில், ஆளுநர் போன்ற உயர்ந்த அரசியலமைப்புப் பதவியில் ஆர்.என்.ரவி நீடிப்பது விரும்பத்தக்கதாகவோஅல்லதுபொருத்தமானதாகவோஉள்ளதா என்பதை இந்தியக் குடியரசுத் தலைவரின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்" என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு குடியரசுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில்

மாபெரும் வெற்றிபெற தீவிரமாகப் பணியாற்றுவீர்!

திருவள்ளூர் மத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணிக் கூட்டத்தில் - ஆவடி சா.மு.நாசர் வேண்டுகோள்!

திருவள்ளூர், ஜூலை. 10 திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. தொழில் நுட்ப அணி புதிய நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம் திருமுல்லைவாயல் அடுத்த சோழம்பேடு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது மாவட்ட அமைப்பாளர் ஆர். பிரவீன்குமார் தலைமை வகித்தார் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் க.பாபு, மோத்தீஸ்ஜித்து, சாருக் சபாரத், சக்தி பிரியதர்ஷினி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் சூர்யாபிரகாஷ், கவியரசு, சாரதாதேவி, சுரேந்தர், சிவா பிரகாஷ், அனுஷா ஆகியோர் வரவேற்புரையற்றினார்கள் இந் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பல் வேறு ஆலோசனைகளை வழங்கி

மினிட் புத்தகங்களை தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு வழங்கினார்.. முன்னதாக நிகழ்ச்சியில் பேசிய சா.மு.நாசர், திராவிட முன்னேற்ற கழகத்தில் முக்கிய அணிகளாக இளைஞர் அணி, மாணவர் அணி மகளிர் அணி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணிகள் செயல்பட்டு வருவதாகவும், திமுகவிற்கு எதிராக வரும் பிரச்சனைகளை தொழில்நுட்ப அணி மட்டுமே உடனடியாக பதில்களும் அளவிற்கு செயல்ப்பட்டு வருவதாக தெரிவித்தார்.. அதோடு எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெறும் அளவிற்கு தீவிரமாக பணியாற்றி தளபதியின் கரங்களை வலுப்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்..

இந்த நிகழ்ச்சியில் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் சி.எச்.சேகர், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுக ஜேந்திரன், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், காயத்திரிஸ்ரீதர், பா. நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ரா ஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர் சன் பிரகாஷ், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், டி.தேசிங்கு, என்.இ.கே.மூர்த்தி, ப.ச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன், டி. ராம கிருஷ்ணன், ஜி.ஆர்.திருமலை, தங்கம் முரளி, மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கே.சுரேஷ்குமார், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், உள்பட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக ஒருங்கிணைப்பாளர்கள் துணை ஒருங்கிணைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பா. அம்பிகா

ஜூலை 10 (2017)

கம்பம் நகரக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த தனது கணவருடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்த இவர், கழக மகளிர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு கடலூரில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில், தமது பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினரை பங்கேற்கச் செய்தவர்.

2006ஆம் ஆண்டு கம்பம் நகர்மன்றத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கம்பம் நகர கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, பெருந்திரளாக மகளிர் அணியினரை திரட்டி பங்கேற்கச் செய்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.க. பொறியாளர் அணி

மதுரை மாநகர் மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணியின் அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட கோ.இளங்கோவன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, அ.வினோத், (127, முனியாண்டி கோவில் தெரு, ஜவகர்புரம், மதுரை7) அவர்கள் மதுரை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 8.7.2023

கு.கருணாநிதி
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி

திராவிட அரசுகளின் ஆதி விதையாக விளங்கும்

பனகல் அரசர் வழி நடப்போம்! தமிழ்நாட்டை முன்னேற்றுவோம்!

பனகல் அரசர் பிறந்தநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 10- திராவிட அரசுகளின் ஆதிவிதையாக விளங்கும் பனகல் அரசர் அவர்களின்பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

திராவிட அரசுகளின் ஆதிவிதையாக விளங்கும் பனகல் அரசர் அவர்களின் பிறந்த நாள் இன்று!

அதிகாரத்தை நாம் அடைவதன் மூலம் நமது மக்களுக்கு நம்மால் எத்தகைய நன்மைகளைச் செய்ய முடியும் என்பதை வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கான அரசாணை, மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தேவையில்லை, பெண்களுக்கு வாக்குரிமை, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் போன்ற எண்ணற்ற புரட்சிகரத் திட்டங்களால் காட்டியவர் அவர்! பனகல் அரசர் பற்றிய துணைப்பாடக் கட்டுரைதான் பள்ளி மாணவராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞருக்கு அரசியல் அரிச்சுவடியாக விளங்கியது.

"தேடற்கரிய ஒப்புயர்வற்ற நமதருமைத் தலைவர்" எனத் தந்தை பெரியார் போற்றிய பனகல் அரசர் வழிநடப்போம்! தமிழ்நாட்டை முன்னேற்றுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை குடிநீர் வாரிய தரவு மையத்தில் பராமரிப்புப் பணிகள்:

இணையதள சேவைகள் செயல்படாது!

சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை,ஜூலை.10- சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள தரவு மையத்தில் (*Data Centre*) பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் இன்று *10.07.2023* மாலை *6.00* மணி முதல் நாளை *11.07.2023* காலை *8.00* மணி வரை இணையதள வழியாக பெறப்படும் சேவைகளாகிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல், கட்டணம் செலுத்தி லாரிகள் மூலம் பெறப்படும் குடிநீர் (*Dial for Water*), புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு விண்ணப்பித்தல், தலைமை அலுவலக கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் ஆகிய அனைத்து சேவைகளும் செயல்படாது. மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு தினசரி லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டு நாளை *11.07.2023* காலை *8.00* மணி முதல் இணையதள சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும்.

இவ்வாறு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் தெரிவித்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (8.7.2023) மாலை சென்னை அன்பகத்தில் திராவிடச் சூரியன் அமைப்பின் சார்பாக சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. விழாவிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும், விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமை தாங்கினார். திராவிடச் சூரியன் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மா.சீனிவாசா வரவேற்புரையாற்றினார். கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ., திராவிட இயக்கச் சிந்தனையாளர் ராஜேஸ்வரி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.